உ

முருகன் துணை.

# கழுகுமலை

## சுப்பிரமணியர் காவடிச்சிந்து.

இஃது

சென்னிகுளம் — அண்ணாமலைரெட்டியார்

இயற்றியது.

'நல்லாசிரியன்' பத்திராதிபர்

ம-ள-ள-ஸ்ரீ,

கா. ரா. நமசிவாயமுதலியார் மாணவரும்

"விஜய விகடன்" பத்திராதிபருமான

க. ச. கதிர்வேல்நாடார் அவர்களால்

பார்வையிடப்பட்டு

குன்னத்தூர்

ஆ. கிருஷ்ணசாமி முதலியாரால்

சென்னை விஜயவிகடன் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1913

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

# முகவுரை

---

நாம் இந்த கழுகுமலை ஸ்ரீ சுப்பிரமணியர் காவடிச்சிந்துக்கு முகவுரை எழுதவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், இப்புத்தகம் பெரியோர்களால் பாடப்பட்டதாலும், ஸ்ரீசுப்பிரமணியர் மீது பாடியதுதியாதலினாலுமே. ஆனால் நாம் இப்போது முகவுரை எழுதவந்த காரணம் யாதெனில், இச்சிந்தானது நீண்டநாளாய் பக்திமான்களால் பாடஞ் செய்யப்பட்டு அவரவர்கள் பிரார்த்தனைகாலங்களில் பக்தியோடு பாடப்பட்டு வந்தன இத்தகையபாடலை சில நமது நாட்டு நாடகக்காரர்கள் சிங்காரரசங்களில் கலந்துபாட ஆரம்பிக்கவே இதில் அசப்பியமிருக்கிறதென்று நமது காருண்ய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களில் சிலருக்குத்தென்பட்டு அப்பாசுரங்களில் சில அசப்பியங்கண்டுபிடித்து வழக்குகொண்டுவந்து பொது ஜனங்களின் விருப்பத்திற்கிணங்க, அவ்வழக்கை தாங்களே நடத்தாமல் நிறுத்திக்கொண்டார்கள். இதனால் சிலர் இக்காவடிச்சிந்தின்மீது ஒருவித கருத்துகொண்டும், இதைப்பாடினால் என்னவருமோ ஏது வருமோவென்று பயந்தும் பக்தியாயுள்ளவர்கள் பலரும் இப்பாடல் பாடுவதை நிறுத்திவிட்டார்கள்.

இதை உத்தேசித்து யாம் இப்புத்தகத்திலுள்ள பாடல்களில் எது அசப்பியமென்று தோன்றுகிறதோ அவற்றை எல்லாம் அறவேநீக்கி, அதற்கு அடிதளை குறையாமலும், பத அருத்தங்கெடாமலும், சந்தக்குணிப்பு தவறாமலும், பெரியோராகிய சென்னிகுளம் அண்ணாமலைரெட்டியார் கவியின் கருத்துக்கு இடறுபடாமலும்படி பிழையறப் பரிசோதித்து திருத்தத் துணிந்தனம்: இவற்றைக் கண்ணுறுவோர் எம்மீது யாதொரு கருத்துங் கொள்ளாது அன்பாய் இத்திருத்தப் பொருத்தங்களை அங்கீகரிப்பார்களென நம்புகிறோம்.


---

இனாம். இனாம்.

அரையணாஸ்டாம்பு, அனுப்புகிறவர்களுக்கு விஜயவிகடன் பத்திரிகையொன்றும், சென்னைமீது சிட்டுக்கவி என்ற புத்தகமும் இனாமாக அனுப்பப்படும்.

விஜயவிகடனாபீஸ்,

மதராஸ் என்.ஈ



உ

வேலுமயிலுந் துணை.

# கழுகுமலை.

## சுப்பிரமணியர் காவடிச்சிந்து.

### விநாயகர் துதி.

திருவுற்றிலகுகங்க வரையிற்புகழ்மிகுந்து
திகழத் தினமுறைந்த வாசனே மிகு
மகிமைச் சுகிர்ததொண்டர் நேசனே பல்
தீயபாதக காரராகிய சூரர்யாவரு மாளவேசெய்து
சிகரக்கிரியிளங்க வேலனே உமை
தகரக் குழல்கொள்வஞ்சி பாலனே

மருவுற்றிணர்விரிந்து மதுபக்குலமுழங்க
மதுபெய்த் திழிகடம்ப வாரனே விக
சிதசித்திர சிகியுந்து வீரனே எழில்
மாகநாககு மாரியாகிய மாதினோடு கிராதநாயகி
மருவப்புளகரும்பு தோளனே ஐயனே
யருளைப் பணிசொரிந்த யாளனே

## கழுகுமலை சுப்பிரமணியர்

தெரிதற்கரியமந்திர மதனைத் தனதுதந்தை
செவியுட்புகமொழிந்த வாயனை இள
ரவியிற் கதிர்சிறந்த காயனை யகன்
தேவநாடுகெடாதுநீடிய் சேனைகாவல ளுகவேவரு
திரலுற்ற சிவகந்த நாதனை விரி
மரையொத் தொளிருகின்ற பாதனை

மருளற்றிட நினைத்து மனதிற் களிசிறந்து
மதுரக் கனிவுவந்து கூடவே பல
விதமுற் றிலகுசிந்து பாடவே விரி
வாரிநீரினை வாரிமேலவரு மாரிநேர் தரு மாமதசல
வதனப் பணிரண்டு தாளையே நய
முதவப் பணிவமிந்த வேளையே (1)

---

## முருகன் துதி.

### வேறு

சீர்வளர் பசுந்தோகை மயிலோன் வள்ளி
செவ்விதழ லாதினிய தெள்ளமுது மயிலோன் விய
போர்வளர் தடங்கையுறு மயிலோன் விரல
பொன்னடியை யின்னலற வுன்னுதல்செய்வாமே

குஞ்சரவணங் காவல் வீடா தபடி
கொஞ்சிமரு வுஞ்சரச ரஞ்சிதவி சேடா
பைஞ்சர வணங்காவல் வீடா வளரும்
பாலனென பாலையொடு காலைநினை வாமே

வல்லவுணர் வழியாதும் விட்டு பொருள
வஞ்சமறசெய் கந்தனிடம் வழியடிமை பட்டு
நல்லவுணர் வழியாது மட்டு மிஞ்சு
ஞானபர மானந்த மோனமடைவாமே

ஒருதந்த மாதங்க முகத்தான் மகிழ
வுத்தம கனிட்டனென வுற்றிடு மகத்தான்
வருதந்த மாதங்க முகத்தான் எவரும்
வாழ்த்து குக நாயகனை யேத்துதல் செய்வாயே. (2)

## கழுகுமலை நகர்வளம்.

### வேறு.

தெள்ளுதமி ழுக்கதவு  சீலன்  துதி
  செபபணுமலை நகுமனு  கூலன்  வளர்
  செழியப் புகழ்விளைத்த கழுகுமலைவளத்தைத்
    தேனே சொல்லு வேனே

வெள்ளிமலை யொத்தபல  மேடை  முடி
  மீதினிலே கட்டுகொடி  யாடை  அந்த
  வெய்யவ னடத்திவரு துய்யவிர தப்பரியும்
    விலகும் படி யிலகும்

வீதிதொறு மாதிமறை  வேதம்  சிவ
  வேதியர்க ளோதுசாம  கீதம்  அதை
  மின்னுமலர்க் காவதனிற் றுன்னுமடப் பூவையுடன்
    விள்ளும் கிள்ளைப் புள்ளும்

சீதளமு கிற்குவமை  கூறும்  நிறச்
  சிந்துரங்கள் சிந்துமதத்  தாறும்  உயிர்ச்
  சித்திர நிகர்த்தமின்னார் நத்தியணி குங்குமச்செஞ்
    சேறுங் காத நாறும்

நித்தநித்த முஞ்சனவ  ரோடுங்  கூடி
  நீடியே விணங்கிமனம்  வாடுங்  கரு
  நீலவிழி யார்வெறுத்த கோலமணி  மாலைாத்த
  நெருங்கு மந்த மருங்கும்

கத்துகட லொத்தகடை  வீதி  முன்பு
  கட்டுதா ளப்பந்தலின்  சோதி  யெங்கும்
  காட்டுவதா லீரிரண்டு கோட்டுடைத யானையிற்பல்
    களிறும் நிறம் வெளிறும்

முத்தமிழ்சேர் வித்வஜனக்  கூட்டம்  கவி
  முற்றிலு முணர்ந்திடுகொண்  டாட்டம்  நெஞ்சின்
  மூன்னுகின்ற போதுதொறுந் தென்மலையின் மேவுகுறு
    முனிக்கும் அச்சஞ் சனிக்கும்

எத்திசையும் போற்றமரரும் அதில்
இந்திரன் கொலுவிருக்குஞ் சீரும் மெச்சு
மிந்தநக ரந்தனைய டைந்தவர்க் கதுவும்வெறுத்
திருக்கும் அருவருக்கும்

துள்ளியெழு வெள்ளையலை மடங்கும் படி
சுற்றிலும் வளைந்தவகழ்க் கிடங்கும் பல
சொன்னமலை பொன்மதிலு மின்னுந் திருச்சோலையுஞ்
சேர்ந்தோன்றும் சோக மொன்றும்

கள்ளவிழ் கடப்பமலர் வாசகன் குறக
கன்னியை விரும்பிடுமவி சாகன் வளர்
கழுகுமலை நகரினவ்ள முழுமையுமெ ணுவிலடங்
காதே மடமாதே. (3)

---

## கோயில்வளம்.

### வேறு.

சென்னிகுளநகர் வாசன் தமிழ்
தேறும் அண்ணாமலை தாசன் செப்புஞ்
செகமெச்சிய மதுரககவி யதனைபபுய வரையிறபுனை
தீரன் அயில் வீரன்

வன்னமயில்முரு கேசன் குற
வள்ளிபதம்பணி நேசன் உரை
வரமேதரு கழுகாசல பதிகோயிலின வளம்நான்மற
வாதே சொல்வேன் மாதே.

கோபுரத்துத் தங்கத் தூவி தேவர்
கோபுரத் தூக்கப்பால் மேவி கண்கள்
கூசப்பிர காசத்தொளி மாசற்றுவி லாசத்தொடு
குலவும் புவி பலவும்

நூபுரத்துத்தொனி வெடிக்கும் பத
நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் அங்கே
நுழைவாரிமுழவோசைகள் திசைமாசுணமிடியோ வென
நோக்கும் படி தாக்கும்

சந்நிதி யிற்றுஜத் தம்பம் . விண்ணிற்
றுலிவருகின்ற கும்பம் எனுஞ்
சலாசியை வடிவார்பல கொடிசூடிய முடிமீதிலே
தாங்கும் உயர்ந் தோங்கும்

உன்னதமாகிய விஞ்சி பெண்ணாட்
டும்பர்நகருக்கு மிஞ்சி மிக
வுயர்வானது பெறலாலதில் அதிசீதள புயல்சாலவு
முறங்கும் மின்னிக் கறங்கும்

அருணகிரிநாவிற் பழக்கம் தரு
மந்தத்திருப்புகழ் முழக்கம் பல
வடியார்கணமொழி பாதினி லமராபதி யிமையோர்செவி
யடைக்கும் அண்ட முடைக்கும்

கருணைமுருகனைப் போற்றித் தங்கக்
காவடி தோளின்மே லேற்றிக் கொழுங்
கனலேறியமெழுகாய்வரு பவரேவரும் இகமேகதி
காண்பார் இன்பம் பூண்பார். (4)

---

## கழுகுமலை வளம்.

வேறு

ன்னுலவு சென்னிகுள நன்னகரண ணுமலைதநு
புந்தியின் மகிழ்ந்து நித்தம் நின்றவன் மூர்த்தி
வெந்திறலரக்கர்களை வென்றவன் மயில்
போலவேணவின் மீதுலாவுநி ராதமாதுமு னேகியேயடி
பூவையே யுனது தஞ்ச மென்றவன் அவ
ளீயுமாவினையுமென்று நின்றவன்

மின்னுலவு சொன்னமுடி சென்னியணி விண்ணவர்தே
வேந்திரனுஞ் சித்தர்களுந் துன்னியே கதி
வேண்டியே யகத்திலன்பு மன்னியே பணி
வேலவன்கிரு பாகரன்குகன் மேவிடுங்கழு காசலந்தனில்
மிஞ்சியவளங்களை நானுன்னியே சொல்ல
ரஞ்சிதமாய் கேளடிவிற் பன்னியே

மூசுவண்டு வாசமுண்டு காவின்மொண்டு தேனையுண்டு
மோகனமுகாரிராகம் பாடுமே உய்ய
வேகமாயப் பேடையுடனே நாடுமே அலை
மோதுவாரிதி நீரைவாரிவின் மீதுலாவிய சீதளாகார
முகில்பெருஞ் சிகரமுறறு மூடுமே கண்டு
மயிலினஞ் சிறகைவிரித் தாடுமே

தேசுகொண்ட பாரதந்த வீரதும் பிராசியண்டர்
தேவதாருவைக்காத் தாற் பிடிக்குமே சுற்றி
மேவியகிளையைவளைத் தொடிக்குமே யொளிர்
சேயசந்திர னேடுரிஞ்சுப லாமரங்களி லேநெருங்கிய
தீங்கனிமதுரசத்தை வடிக்குமே மந்தி
பாங்கினின் றதனையள்ளிக் குடிக்குமே

அந்தர முநிவிவளர்ந் திந்திர னுலகுகடந்
தப்புறம்போய் நின்றசையுஞ் சந்தன மரந்
தப்பிதமிலாது கையால் வந்தன எங்க
ளாறுமாமுக நாதனுக்கிடு மாறுபோல விசாலமுற்றகொம்
பத்தனையு நின்றுதலை சாய்க்குமே அண்டப்
பித்திகை தனிலுஞ்சென்று தேய்க்குமே

கந்தரந்தொ றுங்கிடந்து கந்தரம்பு பாந்தொதுங்க
கர்ச்சனை புரியுந்திறற் சிங்கமே நெஞ்சி
லச்சமுறவிண்ணுறைமா தங்கமே தடங்
காவிலேசில தாவிலேவளர் மாயிருணடு வேகிருதர்கள்
கார்முகமெய்யுங்கணைக ளேறுமே அதில்
வார்மதுவால வாரியுவர் மாறுமே

காலவடி வேநெடிய வாள்கொடிய நாகமுமிழ்
காரிபிணைவாரிகணை பாணமே யனைன
கூர்நயனவேடமின்னா ரேணமே காக்குங்
காலைமேலெறி போதுவாசவனேறுமோமணி தேசுவீசவே
கதிரவன்றளதுமுகஞ் சுழிக்குமே அவன்
குதிரையுங் கண்ணைச்சுருக்கி விழிக்குமே

ஓலமலி கோலநீலவேலை சூழு ஞாலமீதி
லுற்றவரின்பத்துடனே வானமே சொல்ல

வைத்தபலசித்திரசோ பானமே யென்ன
வோங்குகோங்ககிளுங்கிலாங்கிலிபாங்கு நீங்கருவேங்கை பூங்கமழ
யொன்றோடொன்றுவம்புகொண்டு மீளுமே கோள்கள்
சென்றுசென்றுநின்றுநின்று மீளுமே. (5)

---

## வாவி வளம்.

### வேறு.

புள்ளிக்கலாபமயிற் பாகன் சத்தி
புதல்வனனகன யோகன் மலை
போலத்தோன்றிரண்ட மோலப்பன்னிரண்டுவாகன் நல்விவேகன்
வள்ளிக்கிசைந்தமுரு கேசன் அண்ணா
மலைநகவிராசன்மகிழ் நேசன் என்றும்
வாழுங்கழுகுமலைவாவிவளஞ் சொல்வேன்மாதே கேளிபோதே
வெள்ளைநாரைகொத்தும் வேளை தப்பி
மேற்கொண்டெழுந்துசின வாளை கதி
மீறிப்பாயுந்தோறுங் கீறிச்சாயுநதென்னம் பாளை யுடன்றழை
தெள்ளும்பிள்ளையன்னப் பேடும் இளஞ்
சேவலானதுவு மூடும் பின்பு
தேமலர்க்குவியிற் சாமத்தினில் நாடும் உறவாடும்
மின்னிக்குலவிமதி மானும் வரி
வெள்ளைபணிலராசி தானும் மட
மின்னாவிழிகளென்ன மன்னுகெண்டை முத்தமீனுமடமானும்
வனனத்தாமரையைக் கண்டு வாயின்
மதுரராகபாடிக் கொண்டு மதி
மயங்கிபேட்டினுடன்முயங்கியேகிடக்கும் வண்டு கள்ளையுண்டு
அந்தரத்துப்பெண்கள் நாடி யங்கு
அன்பாகவேவிளை யாடிச் செல்லு
மங்கலார்நடக்க நன்னருடைகி யன்னைசெல்லும்பின்னம்
மந்தமேதியுள்ளே யெட்டும் சினை
வராலுமெழுந்துமே முட்டும் போது
மடிசுரந்து கன்று தனைநினைந்து கண்டமட்டும் பாலைக்கொட்டும்

---

## துதி

### வேறு.

மரகத விகசித வொளிதவ ழிருசிறை
மருவியமயின்மிசை யனுதின முறைதரு வாசன் பவ நாசன்
குரகத சுகமணி வளிரத நடவிய
குவலய சாதர னெனுமக ணலிமகிழ் நோலன் பரைபாலன்
பரிபுர வணிகல வென வொலிபுரி
பரிதியு தயமதி லவிழ்மறை மலர்நிகர் பாதன் குகநாதன்
திரிபுர மவையொரு நொடிதனி லெரிகொடு
சிதைவுற நகையுரி சிவன்மன மகிழுப தேசன் விசுவிவாசன்
பதுமநிதியினொடு பணிலநிதியுமெழில்
பரவிய சுருபியு முருகுர புரன்மகள் பாகன் கன யோகன்
சததள நளினல விசுமிசை வதியொரு
சதுமுக விதிசிறை யதிலுற நிறுவுவி சாகன் றடன்வாகன்
குரைதிரை வரைநிரை புரைதர வுலவிய
குரைவயி னடுவுறை நிருதரை முடுகிய கோபன் கமழ் நீபன்
பரைசிவை பகவதி யுதவிய சரஹண
பவனமு முககுகன்மிசைமதுநிதகவி பாடுஞ் சுகநாடும் (எ)

---

## துதி

### வேறு.

பவண கிரியதனுட் டானே மன்னுவானே பல
பாழிலேயலையாமலின்புற நாளுமேயருள்மேவு கண்கொடு
பாராய்இன்னல் தீராய்

அருணப் பகையைமுடித்தோனே புண்யவானே பதி
யாருமேதருவாருமிங்கிலை யாதலாலருள் வாயினம்புரி
யாதே பண்ணுஞ் சூதே

விரகப் பொருவிதனத் தாலே மண்ணின்மேலே கனம்
விணிலேயுழ லாதுகந்தவி சாகனேபுரி நீயும்வஞ்சமென்
பீதேயெண்ணி டாதே

நரக சமன்வருமப் போதே பின்னில்லாதே
நாளுமேமற் வாதுநின்சிறு பாதமாகிய சீதபங்கய
நானே உன்னி னேனே

நிமலப் பெருமிதச்செவ் வேளே கன்னல் வேளே தொடு
நீடுபாணமதான் மருண்டிடை வாடுமாதரிடங்கெடாவகை
நீயே யென்னு வாயே
குமரிக் கெதிபரற் கானே நண்ணி ஞானே யிகழ்
கோதிலாதத போபலம்பெறு நீதர்பால்நலாது றைந்தருள்
கோவே யென்னுள் வாவே
கடல்சுற் றியவுலகப் பாலே மின்னற் போலே வரு
காயமாகிய தீயவன்பிணி மேவியேதவி யாமலன்பொடு
காவே யென்னை யாவே
திடமற் றவனினுடைச் சேயேயன்னை நீயே திவ்ய
சேவையேசெயுஞானபண்டிதர் நாவினாடினிதாவிளைந்திடு
தேனே பொன்ன ஞானே (அ)

---

துதி.

வேறு.

செந்தின்மாநகர்வாழ் கந்தநாதனிரு
செய்யபாத கஞ்சமே நமக்
குய்யமேவு தஞ்சமே யின்று
செப்புவது கொஞ்சமே கேட்கத்
தீயபாதக விரோதமாய்விட்டுத்
திரும்புவாயே நெஞ்சமே
பந்தபாசமிதை யெந்தவேளையினும்
பார்க்கும்போது தொல்லையே எல்லா
லார்க்குமாவ தில்லையே யொரு
பாரமேரு வில்லையே கையிற்
பற்றுநாதன்மாது பெற்றநீதன்மீது
பனுவல்சூடு வல்லையே
மங்கைமார்களிருதுங்க மேவுமாத
வாரணங்கொள் கும்பமே முகம்
பூரணசந்திர விம்பமே பட
மாசுணங்கொள் கம்பமே யுறு
மாரவேளரசு மண்டபத்தருகில்
வைத்தரண்டு ம்கபமே

செங்கை சூரியோதயக்குலாவமலர்
சீதபத்ம தளமே வாயி
லோதுசொற்கள் குளமே யிதழ்
திவ்யபொற்ப வளமே சென்று
சிந்தித்தாற்குமரன் கந்தப்பாதமலர்
சேர்வதெவ்வா றுளமே
வன்னி மானவிழி மன்னலவே கடையில்
வக்ரதந்த சங்கமே கொண்ட
வுக்ரதுங்க சிங்கமே யென்ன
மறலிதூதர் பொங்கமே யுற்று
வந்தவேளைநெஞ்சே கந்தவேளை நினை
மருவுறுத பங்கமே
செவ்ளிமா நகரண் ணாமலைக்கவிஞன்
தேச மெங்கு மிசையே பெறப்
பேசுதந்த மிசையே சற்றுந்
தீர்ந்திடாத நசையே வைத்துச்
சேவலாளிபதங் காவலோடுபணி
தினமுநாறு விசையே (8)

---

சுரம்போக்கு-நற்றாயிரங்கல்.

வேறு.

பாதிராத்திரி வேளையில்வீட்டுப்
பக்கத்தில்வந்து மேவிப் பஞ்ச
பாதகனொரு பாவி சிறு
பாவையைமெள்ளக் கூவிக் கையைப்
பற்றிக்கூட்டிக்கொண் டேகினான்பதை
பதைக்குதேயென்ற னாவி
சோதனைப்பிரகாரமாயென்னைத்
தொடர்ந்ததே பெருந் தோஷம் எவர்
சூதினால் வந்த மோசம் இனித்
தொலையுமோ பிள்ளைப் பாசம் இதைச்
சுற்றத்தாரிந் தாலெனக்குமுன்
சொல்லவோபரி யாசம்

தேனிலங்கிய காவனத்திகழ்
சென்னிமாநகர் வாசன் துதி
செய்யுமண்ணுமலை நாசன் செப்புஞ்
செந்தமிழ்க்கரு ணேசன் நாளுஞ்
சிந்தனை செய்யுந தொண்டர் தீவினை
தீர்த்திடு முரு கேசன்

நானிலப்புகழ் கழுகுமாமலை
நாயகன் பாண்டி நாட்டில் நெஞ்சில்
நாணம்விட்டுத்தன் பாட்டில் வெப்பம்
நண்ணியபாலைக் காட்டில் மகள்
நடக்கவேண்டிமுன் னடக்கலாகத் தெய்வம்
வலித்தோ மண்டை போட்டில

மனமுகந்தொருபையல் பின்செல
வயது மீறின மாதோ இந்த
மார்க்கந்தோன்றின தேதோ சென்ம
வாசனை பல னீதோ அந்தோ
மாதப்பத்துஞ்சு மந்துபெற்றவென்
வயிறுந்தானெரி யாதோ

செய்யுபஞ்சணையும் பொறுதுமே
சிவந்துகொப்பள மாகும் நெரிஞ்
சிப்பழமென்று நோகும் அவர்
சீரடிரண்டும் வேகும் மடி
தீயுங்கானலிற் சாயும்வேனிலாந
தீயிலெப்படி போகும்

தேடினுங்கிடை யாததாகிய
திரவியக்கரு கூலம் போலே
செனித்த பெண்ணுக்குச் சீலம் வேறே
திருப்பினதென்ன காலம் வயது
திரண்டிடா முன்ன மருநதிடறசெலவன்
செய்தானோ விநத்ர சாலம்
காடுசேர்கையிற் காடிவேங்கைகள்
சாட்டுமேயாரா வாரம் அதைக்க

காதிற்கேட்டுவி சாரம் வைத்துக்
கலங்குவாளந்த நேரம் என்றன்
காதலிதன்னை யாதரித்துயிர்
காப்பது வேலன் பாரம்

---

## தலைவியிரங்கல்

### வேறு.

நேமமாய்ப்பணியன் முமலைக்குநவு நீதனைக்
கழுகுமலை நாதனை நெஞ்சில்
நினைக்கநினைக்கமீறியெனைக்கொல்லுதே பெரும் வேதனை
கோமளக்கடலி லேமிகுத்ததிரைக் கூட்டமே
கொண்டபோ ராட்டமே செய்து
கோரமேவிளைத்தாற்றீருமோவெனக்குமனவாட்டமே
வெள்ளைத்திரையின் மேலே துள்ளிததிரியுஞ்சுறு மீனமே
யினியுமுண்டோ மானமே பெரும்
வீறல்கொண்டதனுலேற்குதில்லை யன்னபானமே
அள்ளற்கழிக்கரையுண்மெள்ளக் குலவிவருமாமையே
கொடியமனத் தீமையே நானு
மதிகரித்திடலா லவமதிக்குதிந்தச் சீமையே
பொங்குமதுலர்க ளங்குபரிமளிக்கும் புன்னையே
பெற்றவளாத்த வன்னையே யெந்தப்
போதும்வைதுவைதுமோதுகிறுள்பாடியென்னையே
தங்குலித்திலம்புரி யிங்கிதவலம்புரிச் சங்கமே
தென்றலுமொரு சிங்கமே போலத்
தாக்கவேமயங்கி யேக்கமாமெலிந்தே னங்கமே
மங்கைமார்களத ரங்கணேர்பவள வல்லியே
பிரியேனென்று சொல்லியே போன
வாசகடம்பன்வரநேசத்துடன்சொல்மோபல்லியே
அங்கயத்தினிறைபங்கயத்துள்ளுறை யன்னமே
பிரியம்வைத்து முன்னமே காட்டி
யாதரித்தவேன்முருகன்றனைக்கண் காணேனோ இன்னமே

---

## தலைவியின் ஊடல்.

வேறு,

ஆறுமுகவடி வேலவனே கலி
யாணமுஞ்செய்ய   விலலை   சற்று
மச்சமிலலாமலே மெத்தப்பித்தாகி
அலைகிருயென்ன   தெருவிலே

மீறிய வெண்ணமிலாத பெண்ணோடே
விளம்பாதே வீண்   பேச்சு   சும்மா
வெள்ளைத்தனமாகத் துள்ளுகிருய்   நெஞ்சில்
வெட்கமெங்கே   போச்சு

மேட்டிமையென்னிடங் காட்டுகிருயினி
வேறிலையோ   சோலி   இதை
வீட்டிலுள்ளோர் கொஞ்சங் கேட்டுவிட்டாலது
மெத்த மெத்தக்   கேலி

தாட்டிகஞ்சேர்கழு காசலமாநகர்
தங்குமுரு   கோனே   இந்திர
ஜாலத்தினுலென்னைக் காலைபபிடித்தாலும்
சம்மதியே   னுனே

அக்கரைக்காரறகு புத்திகெஞ்சமென்ப
ராரும் பழ   மொழியே   நீயும்
அபபடியென்னைப் பலாத்காரஞ் செய்திடில்
லாச்சுது பெண்   பழியே

சக்கரைக்கட்டிபோல் வள்ளிதெய்வயானை யாந்
தையலுனக்   கிலையோ   ரண்டு
தையலரைக்கொண்ட பையலுனக்கென்ன
தானுமொரு   நிலையோ

அம்புவியிற்சிறு பெண்களின்மேலுனக்
காசையேன்   காணுதையா   நீ
ஆக்கப்பொருத்தாலு மாறப்பொறுதவர்
ஆகபவ   தோணுதைய

நம்புமண்ணுமலை தாசன்பணியும்
நளினமலாப்   பாதா   கொஞ்ச

நாளைக்குமேலொரு மணிக்குமேநன்மை
நடத்தினலா காதா. (12)

---

## பாங்கிதலைவி நிலைமைகூறித் தலைவனை யழைத்தல்.

வேறு.

கண்ணுயிராம் படைத்த விண்ணுரிடந்தரித்த
கனவயிரப்படை யவன்றகளைக்கொண்ட கர்க்கனை திருக்
கழுதுமலைப்பதி யனுதினமுற்றிடு சுத்தனே

பண்ணுமலைக்கிடர்க னண்ணுத் தொழுப்துமிக
வகமகிழுத்தன தருளையத்ளிதிடு மையனே திசை
யாவமும்வேட்குற மயிலைநடத்திய தூய்யனே

மின்னேகமலமலர்ப் பொன்னேறி வனப்புகல
விகசிதாத்தின நகைகடரித்தொளிர் மெய்யினுள் கதிர்
விரவியசித்திர வளையலடுக்கிய கையினுள்

என்னேரமுமனதி லுன்மீதில் தியானங்கொண்
டெழுகியசித்திரமெனமவுனதரி க்கிருள் வள்ளத்
திடுகிறயுத்தமுகிலையும்வெறுத்தரு வருக்கிருள்

கும்பத்தினைச்சினந்து வம்பைப்பிதிர்த்தெழுந்து
கொடியிடைமுற்றிலுமொடியவளைத்தது அங்கமே தினம்
குலவுகடப்பினில்கினைவதுவைத்தனள் மங்கையே

செம்பொற்சிலம்புகள் புலம்பப்பெருந்தெருவிற்
றிகழ்தருசிற்றில்கள்புரிவதைவிட்டவள் தியங்கினுள் உன்றன்
றிருவழகைக்கரு விழியுளிருத்தியே மயங்கினுள்

போராடுதற்குரிய கூரார்மலர்க்கணையெய்
புகழ்பெருசித்தசனுவதனைப்பெரு புருவத்தாள் தவம்
புரிபவரைத்தன தடியில்விழப்புரி பருவத்தாள்

[illegible]ாகசிகதைதனில் நேராகவைத்துனது
திருதருட்சனி யதனையருத்தியே காரையா யிந்த்
தெரிவையுளத்துனைவலதுபிடித்தவ கரரையர். (13)

## தலைவி பாங்கியை தூதுவிடுத்தல்.

வேறு

பூமிமெச்சிடுமன் னுமலைக்கோ துணை யானவன்
மயில்வாகனன் ஒரு காவலன் ஏனடா
புனத்தைக்காக்கும் வள்ளி
மனத்தைப்பார்க்குமெல்ல பிரானவன்

சேமமுற்றகழு காசலேசனை தேடுதே
மனம்வாடுதே காலத்தை ஓடுதே யிரு
செங்கைதங்கிநின்ற சங்கிலங்கள் கழன்றோடுதே

தென்றலானபுலி வந்தமேற்பாய்மோதி சீறுதே
தடுமாறுதே யிங் கோறுதே மெத்த
தீமையாயிருளி லூறுசாகிறீபு மீறுதே

குற்றமானபயம் ரண்டும்விட்டிமிம்மிக கொண்டுதே
திகழ்மண்டுதே வெப்புக் கண்டுதே மலாக
கொம்புபோலமெல்ல மருங்குலான தந்து வண்டுதே

உள்ளமெல்லமெல்ல கந்தமீதுங்கினை துருகுதே
முத்தங்கருகுதே கண்ணீர் பெருகுதே ஏனோ
ஞுச்சிக்கேறிபக்தி
பித்தங்கிறுகிறென்று வருகுதே

வள்ளமேவுபசும பாலுந்தேனுமரு வருக்குதே
கசந்திருக்குதே துன்பம பெருக்குதே மன்னா
வாருந்தாதுமாறுக ஏறவேதினமும பருக்குதே

பாரவானசமுசார வேடனமபு பாயுதே
புடல்தேயுதேமலா தீயுதே கொடும
பாவியானமதி யாவிசோர வந்து காயுதே

மாரவேளினால் கோரமானபெரு வாதையே
யெனுந்தீதையே நீரத தூதையே சொல்லடி
நாபங்கீர்குலனைக்கூட்டி வாடியடி கோதையே. (14)

—★—

## பாங்கிதலைவியின் அவயவத்தருமை சாற்றல்.

### வேறு

சந்தவரை வந்தருக நாதா பரை
யந்தரிமு ளுென்மணியா மாதா அருள்
சண்முகசடாட்சரவி நோதா
குழைக்காதா சூரர் வாதா வன
சஞ்சரிவெண் குஞ்சரிச மேதா

செந்தமிழண்ணுமலையை யாளாக் கொண்ட
கந்தவரவிந்தமலர்த் தாளா கட்க
சிந்திடுகடம்பணியுர் தோளா
நெடுநாளா மறவாளா வினைத்
தேடோர்குயிற் பேடுருவங் கேளாய்

சுந்தர மிகுந்தகுழன் மேகம அவள்
சொர்ந்தநுதலிந் துவிலோர் பாகம் திருத்
தும்புருவம் விலொடுசி நேகம்
தவயோகம் வென்ற னேகம் வஞ்சந்
துஞ்சுவிழி நஞ்சினிலும் வேகம்

சந்தமலிகின்றமுக மிந்து வள்ளைத்
தண்டுசெவி யென்பதுவே தந்து கன்னம்
சாணைநனிசா சியின்ப சுந்து
மதுச்சிந்து தலபொ ருந்து சிறு
சண்பகந் துப்பாமிதழ்சி வந்து

செங்குமுத புட்பமதை யொத்து மொழித்
தேனுதவும் வாய்நகையோ முத்து கண்டஞ்
சீதரனு ருதுவர நத்து
சொற்றித்தித்துப பாகைக் கைத்து விடச்
செய்யுமென வுனலாமு ளத்து

குங்குமவா கங்கசகோ தண்டம் முன்கைக்
கோமகர யாழுவமை விண்டம் கையைக்
கோகனக மோவனம ருண்டம்
ஆழிமண்டங் குலி கண்டம் நெருக்
குங்கெளிறு சிறுகிளி துண்டம்

கட்டுகதிர பட்டுமணி வம்பு இழி
பட்டுவிழி விட்டிடவே மூம்பு இற
கட்டழகாம் வட்டகுட்டச் சொம்பு
யானைக்கொம்பு சிவ சம்பு குடன்
கைக்கும்பலை யாதபொறப றம்பு

மட்டுமிழ் பசுந்துளப மாலே செங்கண்
வளருகிற தயிசெனுமொ ராலே சிறு
வயறுமபிர சிறறெம்பு போலே
விரைவாலே வெள்ள மேலே சுறறி
வந்தசுழி யுநதியிடை நூலே

தரமரவ படமெனல முண்டு துடை
தங்கநிறச செங்கதலித தண்டு முழந
தாட்குவமை கேட்கிலவை நண்டு
சினை கொண்டு வளர் பெண்டு வரால்
சாருங்கணைக்கா லெனு மிரண்டு

பரடுதரா சுயர்குதிகந் துகமே பணி
பரவுபுறவடியிணைபுத தகமே தடற்
பவளமதி தசவிரல்கள் நகமே
யம்போருகமே பத யுகமே மயில்
பண்ணுமிளஞ சாயலையா சகமே

மேனகையொ டுருவசியிந்திராணி செல்வ மிக்க
திருமுக்யகலை வாணி இந்த
மின்னரசி தன்னுருவங் காணி
நெஞ்சுநாணி மலரப் பாணி தலை
மீதுகுவித்துத்தொழுவார் பேணி

சேனையொடுவந்துகருங் காவி யம்மைச்
செய்யகருப்புச் சிலைவைத் தேவி சண்டை
செய்யுமொரு மன்மதனும் பாவி
எங்கடேவி யிடமேவியுட லாவி தனைத்
தீர்க்குமிளங் காத்திடுவாய் மேவி. (15)

## தலைவன் வருத்தஞ் சாற்றல்.

வேறு

வண்ணாத கிளைமாவைத் தெள்ளியே யுண்ணுட
வாழ்க்கைக் குறக்குல வள்ளியே பயிரா
வாங்கப்பிறந்திட்ட கள்ளியே யிரு
வடமேருவை நிகராகிய
புயமீதிதணிபலமாமணி
மாலைபடைத்தன துள்ளியே விழு
வான்மதி விசுந்தி யள்ளியே

கன்னத்தி னிற்குயிற் சத்தமே கேட்கக்
கன்றுது பாரென்றன் சித்தமே மயக்
கஞ்செய்யு தேகாமப பித்தமே யுடல்
கனலேறிய மெழுகாயின
தினியாகிலு மடியாதகி
காத்தருள் செய்துன்றன் சித்தமே தந்தாற்
கைதொழுவே னுன்னை நித்தமே

வாடியிருப்பது வஞ்சமோ பொல்லா
வன்கருங்கல்லோ வுன்னெஞ்சமோ கொண்ட
மாமப்பயித்தியம் கொஞ்சமோ உயிர்
மறையாகமமுழுதாகிய
மதிலேமொழி சுகமேதரு
மார்க்க முனக்கென்ன சஞ்சமோ ஒரு
வார்த்தையுரைக்கவும பஞ்சமோ

தேடக்கிடையாத சொன்னமே உயிர்ச்
சித்திரமேமட வன்னமே அரோ
சிக்குதுபால்தயி ரன்னமே பொரு
தில்லையானது கொலைவேலென
தினமேமிகு கொடுவாதனை
செய்வதுகண்டிலை யின்னமே என்ன
செய்தேனோ நான்பழி முன்னமே (16)

—*—

## தலைவனோடுற்றமையை தலைவிபாங்கிக்குக்கூறல்.

வேறு

சொந்தினமாநக ரந்தனிலமேவிய
தேசிகனுமுரு கேசன் மயில்
வாசியி லேறுமுல் லாசன் சிறு
திங்களும்பணி சங்கமாசுண
முந்துலங்கிய கங்கையாறொடு
செஞ்சுடாடவி மீதணிவார்செவி
சேரமுன் னோதுப தேசன் அடி
யாரதமையாள் விசு வாசன்

எந்தநேரமும் வந்தனைசெய்தடி
யெண்ணும் அண்ணமலை தாசன துதி
பண்ணுமெய்ஞ் ஞானவி லாசன் சான்றோ
டிந்தெழுந்து தயங்கு மாலையில்
வந்துவண்டு முழங்கு சோலையி
லின்பசாகர மாகியநாடக
மன்புடனே செய்தான் மானே அநதச
சம்பரமமென்னசொல் வேனே

மங்கைமார்பல ரும்புடைசூழ்தர
மாமலர் கொய்திடச் சென்றேன் அங்கோர
பூமரத்தே தனி நின்றேன் சந்த்ர
மண்டலங்களை வென்றவாநன
மைந்தொடொன்று மிகுந்தவார் மது
வண்டலோடுக டம்பெனுமாரமும்
வாரமுந் தோன்றிடச் சேர்ந்தான் என
தேரைபார்த்தே தனி கூர்ந்தான்

பங்கயாசன மேலுறைநான்முகப
பாதகனுமாக் கைதான் கொண்டுன
சோதியையேபாடிச் செய்தான் அடி
பஞ்சுரஞ்சிது மஞ்சுசீரடி
கொஞ்சு ரஞ்சித வஞ்சியேபுவி
பட்டுநீ நிலைநிற்க வொண்ணுதென்று
பண்மலர் மெத்தையொன திட்டான் பின்பு
மென்மல ரெந்தன்னை தொட்டான் (17)

## துதி.

### வேறு

கன்னற்சூழ்பழ னம்புடைசூழ்கழு
காசலந்தனில் வாழ்பிர   தாபனே   கன
வாசமெங்குங் கமழ்கின்ற   நீபனே   வள
காதலோடிரு போதிலும்பல
போதினாற்பணி வாரமனவுத்துறை
காரிருட்குவை நீக்கிய   தீபனே   அதி
சூரபதமனைத் தாக்கிய   கோபனே

சென்னிமாநகர் வாழுமண்ணுமலை
செப்புஞ்செந்தமிழ் முகக்கதி   நேசனே   சிவ
சுப்ரமணிய னெனும்பர   காசனே   கொடுஞ்
சிந்தைதனைநந்து புலையர்கன்றிரு
மந்திரந்தனில் வந்தடைந்துனை
சேவிக்குங்குண மெனெறனக   காகுமோ   மிகு
பாவிக்குந்துய ரெப்படிப்   போகுமோ

வந்தவர்க்குப பழம்புரிக்   காடியே
தந்திடச்சகி யாததைமைத்   தேடியே   பிர
பந்தமெத்தனை யெத்தனை   கோடியே   குலை
வாழையின்பழமேபோற கனிந்தென்
தாழையின்கனி யோமெனும்படி
மதுரிதம்பெறமேவிதம   பாடியே   யொரு
பரிசும்பெறுந்துளம   வாடியே

வெந்தரைகருள் வெப்பிடைப   பாலையே
சிந்து பித்தரைப்போல்வெறும்   வேலையே   செய்யும்
வீணனென்னிளங் குன்றனைடைக்   காலையே   எந்த
வேளையுந்துதி கூறவுந்துயர்
தீருமெம்பவ மாதவம் புரி
வில்வவேணிசேர கற்பக   வாலையே   தரு
செல்வனே யெனுங்கற்பகச   சோலையே.   (18)

## தலைவியின் ஊடல்.

வேறு.

செந்தூர் வளர்முருக    நாதா அருணைதயச்
செந்தாமரைநிகரும்    பாதா திகழ்
சிநைதுயி லண்ணுமலைசெய்
நிந்தையை யென்னுதருள்செய்
சித்திரவேற்கரனி    நோதா உனதுவஞ்ச
செய்கையினனமுங்கெரி    யாதா

சநதோஷ மாகவேபோய்    வீடு வீடுதோறுஞ்
சரசசொலாடுவதே    பாடு வந்துன்
கனலியாகள பேர்வரிய ச
சகஸ்திரம வேணுமெனெ    ளொடுதனித்தோரிடங்
தங்கியே பேயுமேவெ    ளாடு

வேசையர் வாசலிலே    சென்று தம்பலங்களை
வெட்கமில்லாமல் வாங்கி    மென்று தின்று
மெத்தப பரிதபியாகொண்டு
சுற்றி திரிந்தேமருணடு
விடுகேடிவந்தாயே    இன்று தொடவேமாட்டேன்
வேணுமென்றாலும போடு    சொன்று

ஆசைகொண்டவருக்கு    ரோசங்கிடையாதெம்பார்
அபபடிக்காசல்லிசு    வாசம வைக்கும்
அநதவில்லபபெணடுகளைச
சொநதமெனக்கொணடனையே
யாருமுன்னைபபோலே    மோசம்போனவருண்டோ
ஆருஞசெய்கிறரோபரி    காசம்

சுந்தாசெய்யாதேபல    வந்தம் புதுமலரைக்
கசக்கியறிவாாகளோ    கநதம் சற்றுங்
காதலிலாமற் சிவந்தரா
கையைவலியபபிடிசதுக்
கசக்கிலாமோசுகா    நந்தம் உனக்கெங்கும்
கனவிலுமில்லையினிக்    தொந்தம்

எந்தபறப்பினுமே    வல்லி புணையல்லாமல்
எவராயுப்பாரேனென்று    சொல்லி ஊரில்
எத்தனைபரத்தையரோ
ணித்தமுநீகத்தினையோ
இப்படிக்காசி காஞசி    டில்லி கன்யாகுமரி
எங்கும்பார்த்தாலு மில்லைச    சல்லி

கங்குகரையில்லையே ஜாடைசொல்லிவையவர்
கட்டுகிறாயேயெதற காடை மானங்
காக்கவல்லவாவென்பரே
சேர்க்கையிலாதேயன்பாலே
காத்தாயேவேசைமாதா மேடை கைவசமாமோ
கலப்புல்லுத்தின்றாலுமோ காடை

குங்குமஞ் சந்தனஞ்சவ் வாது கதம்பங்
குழைத்துமென்றோயத்தின மீது வாசனை
கொட்டுமெழி னெற்றிசந்த
பொட்டொடிப கட்டுதித்த
கோகிலம்புதிதாய் வந்த தேதுநடந்ததெல்லாங்
கொஞ்சஞ்சொல்வாய் பண்ணாதே சூது (19)

— * —

## தலைவி வருந்தல்

வேறு.

பாளைவாய் கமுகில்வந்தூர் வாளைபால் வயல்சூழ்செந்தூர்
பாலனம்புரியவந்த புண்ணியா எந்த
காலையுஞ்செய் கிறப்புமுன்பின் னெண்ணியா

வேளையோவிடிந்ததையா நாளைவாரேனின்று கையை
விட்டிடென்றாலுமவிடாமற் பிடிக்கிறாய் பாலை
யொட்டவே மடுவரிந்து குடிக்கிறாய்

நித்தமும் ஆண்ணுமலைசெய் குற்றமெண்ணவேலாகண்டோர்
நின்னிதழ்பப வளங்களில வெள்ளையே தென்று
லெனனசொல்லவே ஞொருபெண் பிளளையே

மத்தகரிகர்புயத்தின் மெத்தகரவாகைப்பட்டு
மாலைப்பிறை போலவொளி தோணுதே யிது
கேவிதுறை யாருமென்று நாணுதே

உன்னையும் விவாகமில்லா வென்னையுமேயன்னைகண்டா
லொன்றுஞ்சொல்லிடாளே அடா பாவியே யின்று
தின்றிடுவேனென்பாள் பச்சை நாவியே

சன்னைசாடை யாகவந்தென் றன்னைக்கண்டுபோவென்று
சாற்றிடுமென் னுண்மையான சொல்லையே விட்டுக
கூத்தவன்போல வந்தாயென்ன தொல்லையே

சாறுசேர் கரும்புருசி யாயிருந்தா லும்வேரோடு
தான்பறித்துத் தின்னுவது நியாயமோ முழு
ஆண்பிள்ளை கிது தான் சமா தாயமோ
நூறுநூறாயிரந்தரம் மாறி மாறியேபிறந்து
நோகுதே எந்தனுடைய வுள்ளமே சித்தப்
போகுதே பலவாய் வுந்தன் கள்ளமே. (20)

---

## நற்றாய் தலைமகளின் வேற்றுமைகண்டு வினவுதல்

வேறு

என்னடி நான் பெற்றநங்கை இளநங்கை வுடல் சங்கை என்
இப்படியாயிற்றே செங்கை வளை
யிடற்பொரிட வுடைபட்டன நடைகெட்டதுன் னுடையிற்பல
வெய்தின சந்தனப் புள்ளி என்னை
செய்தாயோ சொல்லடி கள்ளி
அன்னவயறபெருந்தூர்வாசன் மந்தகாசன் அன்பர்நேசன் நாளும்
அண்ணுமலைக்கவி ராசன் பாடும்
அமுதச்சுவை தருமுத்தமிழ் களபத்தொடு கமழ்பொற்புய
அற்புதவேலவன்செய் ஜாலம் தன்னால்
கற்பழிந்தாயோ விக் காலம்
சித்தசன்மெச்சிடு நூலை யந்திமாலை யொடு காலை வைத்துச்
சிந்திப்ப தாச்சுதுன் வேலை
சின்னத்தின மடவஞ்சியேயுன்னைப்பணியொடு கொஞ்சியே
சேவற்கொடியோன்பூஞ் சோலை தனில
தேடிவந்திட்டாளே மாலை சுப
மெத்தப்பிரமைகொண்டேங்கி மனமேமாங்கி நேசப்பாங்கி முறை
விட்டுத்தனியாக நீங்கி வடி
வேலுக்கதியனை எண்ணியே மேலிட்டலறியகன்னியே
வெட்கத்தைப் போக்கடித் தாயோ காக
வேசைத்தனம்படித் தாயோ

இன்னம்விவாகமேயில்லை கமழ்கொல்லை வெட்டிமுல்லை குழ
லெனகுஞ்சிங்காரிக்க வில்லை சந்த
மினிதாகிய களாந்தனை கணமேபருவி லணிமென்றனை
இப்படியே தலை விதியோ பெண்ணே
செப்படியேயிது மதியோ

சன்னதமாகுமேயோர்பேபே பிடித்தாயே வேப்பங்காயே போலச்
சாதம் வெறுத்தாயே நீயே பெருஞ்
சண்டாளிபே கண்டோர்திரை கொண்டோர்பழிவிண்டார்நம
சாதிக்கெல்லாமொரு வடுவே வரத்
தான்பிறந்தாய்வந்து நடுவே

வண்ணமயிரவிதோடி ராகம்பாடி யுறவாடி யுன்முன்
வந்துதினமவிளை யாடி எங்கும்
வசைமேவிடும் வகைசெய்தனை குழறினி மிகவேயுயர்
வையகத்திலிதை யறியா அந்த
வாலைமகனுக்கும் வெறியா

எண்ணங்குமரவேள்பாலே*சென்றதாலே யினிமேகேளே பழி
யெப்படியுமுன்றன் மேலே வரு
மென்றேயெண் துளமஞ்சுது நன்றேசொலிலென வஞ்சக
மிலலைக்கிழவன்சொல வினைக் காரர்க்
கேற்றாதென்றாலுங்கண் ணே. (21)

---

## தலைவனிட்டத் தலைவி வருந்துதல்

### வேறு.

மஞ்சுநிகர்குந்தளமின்னே சதகளங்கள் விகசிதஞ்செய்
வாரிசாதனத்தில்வாழ் பொன்னே செய்ய
வன்னமேயொளிர் சொன்னமே நடை
யன்னமே யிடை மின்னமே மெ
வந்தகுலபாரவஞ்சியே அதிவிருப்பத் துடனுரைக்கும்
வார்த்தையைக்கேளாசை மிஞ்சியே

## கழுகுமலை சுப்பிரமணியர்

அஞ்சுவயதானபருவந் தனிலெனது பெருமனைமுன்
அங்கசவேள் போலே வுருவம் பெற்றே
அன்றுவந்து நயந்துமாலையில
னெஞ்சழிந்து மயங்கவே யரு
ளாறுமுகவேலவனையே
நினைவுகொண்டே மதிமருண்டே
ஆறுதில்லையென்ன வினையே

சென்னிகுளமேவிய வாசன் இனிபதுதி யனுதினமுஞ்
செய்திடும் அண்ணாமலைதாசன் பாடுஞ்
சிந்துமீது மிகுந்தநேயமு
றுஞ்சுசீலகு கஞ்சரோருக
திவ்விய முகங்களாறுமே
கண்களிற்கண்டால் பண்பினர்க்கெலாம
செவ்விதழும் வாயுமெழுமே (22)

கழுகுமலை சுப்பிரமணியர் காவடிச்சிந்து
முற்றுப்பெற்றது.





முருகன் துணை

# கழுகுமலை சுப்பிரமணியர்

# வழிநடைப் பதம்.

விநாயகர் காப்பு.

சீரார்கழுகுமலை செல்லும்வழிநடையைப்
போராருஞ்சிந்தாகப்பேசுதற்கு-காராய்
குணபதியேநீதிக் குணநிதியேஆதிக்
கணபதியே என்பால் கனிந்து.

இராகம் காம்போதி-தாளம் ரூபகம்.

பல்லவி.

கண்ணேகற்கண்டே கழுகுமலைவளர்
கந்தனை சேவிப்போய்வாராய்-இந்த
காசினிதனிலே பூசித்தபேர்கட்கு
கனயோகமுண்டாகும் பாராய். (க)

## கழுகுமலை சுப்பிரமணியர்

அநுபல்லவி

பெண்ணே இதுதாண்டி பீச்சுஸ்டேஷன் பாரு
பிரியமாய் டிக்கட்டு கொண்டோம் வண்டி ஏறு
எண்ணுமுன்னே கண்ணே எழும்பூர் வந்தோம் நேரு

இதமாகவே
பதமாகவே
கதிரோனுமே
பதிசார்ந்தனன் (க)

பாராய் சைதாபேட்டை பரங்கிமலையிது
பாங்குற்றோங்கும் பல்லாவரமே செங்கற்
பட்டு இதுதாண்டி பட்டாளம் பாலாறு
பாவாயிது விழுப்புரமே அடி
மேநாக ஓடுது சீராய் பண்ருட்டி
நெல்லிக்குப்பமிது திரமே கிள்ளை
நேர்த்தியை என்சொல்வேன் கீர்த்தியாய் ஜீவர்கள்
சேவித்திடும் சிதம்பரமே

பூராய் நடராஜனை பொன்னடிமேல் தி
பூமிகொழுநன் கோவிந்தன்ருமை சுதி
தோராயமாய்க் கொண்டு தொல்லைகளை மிதி

துதியே சபா
பதியே தினந்
ததியே என
நிதியே வரும், (க)

வள்ளமிகுந்திடுங் கொள்ளிடந்தாண்டினோம்
வைதீசுரன் கோவில பாரே இதோ
வந்தோம் மாயவரம் சேர்ந்தோம் கும்பகோணம
வளங் கொழிக்குந் தஞ்சாவூரே அதோ
தென்னூரோடை காவிரிசூழ் திருச்சி
திருவரங்கர் கோயில் நேரே இது
திண்டுக்கல் அம்பாத்துரையையும் கடந்தோம்
தெரியுது கொடைக்கானல் சீரே.

# வழிநடைப்பதம்

வின்னூட்வாடிபட்டி ஸ்டேஷனையும் விட்டோம்
விளங்குஞ் சோழவந்தான் சமையநல்லூர் தொட்டோம்
மள்ளர்நிறைவயல் மதுரையை முன்னிட்டோம்
மானே சொக்கரை
போற்றடி
மீனாக்ஷியைதினம்
ஏற்றடி (க)

அனமே பசுமலை கடந்தோம் திருப்பரங்
குன்றங்கந்தன்வளர்ஸ்தலமே இதோ
அடுத்துவந்துவிட்டோம் கப்பலூர்ஸ்டேஷனை
அதுதாண்டி திருமங்கலமே
முனமே தெரியுது முனிசிபல்கவுன்சிலர்
கூளையநாடாரின நிலமே அடி
மொய்குழலேசிவரக் கோட்டையைக்கடந்தோம்
கள்ளிக்குடி ஸ்டேஷன்பலமே

தனமே பெருகிய விருதுபட்டியிது
தளிருஞ்குலக்கரை துலுக்கப்பட்டியது
கனமேர்வேப்பிலைப்பட்டி சதிரமோ பொது
கடுகினில் வண்டியு
மோடுது
முடுகியே யூர்களை
நாடுது (க)

சின்னப்பெண்ணே சாத்தூர்ஸ்டேஷனைப்பாரடி
செப்புமநள்ளிஇது மயிலே இதோ
சிறப்புற்றிருக்கும் கோவில்பட்டிஸ்டேஷனிது
சீக்கிரமிறங்கு குயிலே
என்னசொல்லப்போறேன் மன்னன்எட்டியாபுரம்
இபறறிய பங்களா ஒயிலே சற்று
இங்கேயிருந்து இளைப்பாறிக்கொள்ளுவோம்
இறங்கிடுவோம் கடு வெயிலே

## கழுகுமலை சுப்பிரமணியர்

கன்னல்மொழியாளே கடுநேர மாச்சுது
கடுமைபகலோடுமேறுகுது கடலுள்ளே போச்சுது
நன்னையமதிகால் கிழக்கில் சேச்சுது

நடடி விசை
தொட்டு மிட்டா
யெட்டி கெஞ்சம்
கொட்டி புண்ணை (க)

பாதையிருபுறம் சாலையழகதை
பகர என்னுலுமாகாது அந்தோ
பாராய் மைதானத்தில் பட்டாளத்தார்வீடு
பஞ்சாலையாகுமே யீது இளங்
கோதையே வானாரம்பட்டியிதுவட்டி
கொஞ்சிநடந்துவா மாது இது
கூறும்நாலட்டம் பூதூர்வந்துவிட்டோம்
கூசாமற்பேசு இப்போது
காதலியே கழுகுமலையுந் தெரியுது
கருது சங்கரன் கோவில்சாலைபிரியுது
ஆதலினாலெனக்கன்பு சொரியுது

அளியே பசுங்
கிளியே கதி
ரொளியே சரப்
பளியே புனை (க)

## ஆண்சொல் விருத்தம்

கந்தனை துதிக்கவென்றும் காவடி பார்க்கவென்றும்
சிந்தனைபுரிய வென்றும் சீர்நகர் பார்க்கவென்றும்
வந்தனை புரியவென்றும் வந்தனம் கழுகுத்தங்கும்
விந்தையை மலையின்நேர்மை வியப்புடன் பாராய்மாதே.

ஊர்வள மதனைப்பாராய் வுறைபவர் வளத்தைப் பாராய
நீர்வள மதனைப்பாராய் நிலவள மதனைப்பாராய்
ஏர்வள மதனைப்பாராய் எழிலுறுவர்த்தகத்தின்
சீர்வள மதனைப்பாராய் சென்னையிற்பிறந்தபெண்ணே.

## வழிநடைப்பதம்

கோவிலைப்பாராய்மேன் கோபுரமபாராய்சூழுந்த
வாவியைப்பாராய்வான வளையுளமடலைப்பாராய்
பூவினம்பொலிந்துவண்டு புகுந்தசஸ்ருகொடுபடுங்
காவினங்களையுங்கண்டு கண்களி செனனைப்பெண்ணே.

## இருவரும் கோயிலுக்குள் சென்று பாடுதல்.

() முருகனே சரணம் வேத முடிவனே சரணம் மாயன்
மருகனே சரணம் பசயசபரிகனே சரணம்வள்ளி
அருகனே சரணம் போரூர் அண்ணலே சரணம் ஞானப
பெருகனே சரணம் மாறான் பெய்துயர் தீர்ப்பாய் போறறி.

வேலனே வருகசீதி விமலனே வருகவேத
மூலனே வருகஆதி முதலவனே வருகதண்டைக்
காலனே வருக தகைகு கடப்பனே வருக போரூர்
சீலனே வருக எங்கள் சிறுமையைத் தீர்பபாயபோற்றி.

சண்முகா முறையோ தொண்டா சகாயனே முறையோசோதித்
தண்முகா முறைமய கரணதறபரா முறையோ ஆதி
ஒண்முகா முறையோ போரூர் உறைபவா முறையோ ஞானத்
திண்முகா முறையோ எஙகள் தீர்ப்பாய் போறறி

---

இவை சென்னை "வித்தியாவதி" பத்திராதிபர்

ச-சு-சங்கலிங்கநாடார் எழுதியது

() இந்தப்பாட்டு படுகோஷி விலாசத்திலுள்ளது

புத்தகம் வேண்டிய புஸதக வியாபாரிகள தங்கசாலை தெருவு நெ. 355. திருவண்ணாமலை மடத்துவீடு மதராஸ். கு ஆ. கிருஷ்ண சாமி முதலியாரிடம பெற்றுக்கொள்ளலாம.
ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் கழுதயலைசுப்பிரமணியர் காவடிசிந்தும கேட்லாக்கும் இனாமாக அனுப்பப்படும்.

இந்துஸ்தான் "பங்கஜலோசனி" ஜாவளி விலை அணா 2.
பார்வதி சரசபூஷணி சரித்திரம். அணா 4
பாரதம் முழுமையும் பார்வதி கம்பெனியாரால் நடத்தியதை
தமிழிலியற்றியது புத்தகம் 1-க்கு- 0 4 0

வாங்கியேவெயிலுலர்த்திச் சூரணமேசெய்து வண்மையுடனந்
திடைக்குகற்கண்டுகூட்டி, தேங்கியேவெருகடிதான் அந்திசந்திற
மானபசுவெண்ணெய்மண்டலமேகொள்ள, ஓங்கியே ஓடுகிற வெள்ளைதீ
ரும் உத்தமனே நீரெரிப்புடனேதீரும், பாங்குடனேபத்தியமோ
காரமாகா பரிவானபுளித்தியனைபாகமாமே ௱௧0

இஞ்சிசூரணம்,

பாகமாயின்னமொருசூரணங்கேளு பாங்கானஇஞ்சிபலம்பத்து
வாங்கி, சோகமாய்த்தோல்போக்கிவில்லையாக்கி சுத்தமாய்பொன்வறு
ப்பாய்பசுநெய்யாலே, ஏகமாய்ப்பொடிசெய்து வைத்துக்கொண்டு
ஏலமொடுதிரிகடுகுகிராம்புஜாதிக், காகமாய்வாலுளுவைச் சாதிக்கா
யுந் தருவான ஆனந்திப்பிலிசீரகமாமே . ௱௧௧

ஆமப்பா அதிமதுரங் குருசானிஓமம் அமுக்கிரா சக்கசாலவ
ங்கப்பத்திரி, நாமப்பா மோடியுடக்கொத்தமல்லி நலமானசீரச்சுமு
ந்திரிகைலுக்க, தாமப்பா வகைக்குசாம்பலமேவாங்கித் தருவானஇள
வறுப்பாய்சூரணமேசெய்து, ஓமப்பாசீனிபலம்பத்துங் கூட்டி உத்
தமனே மூன்றுமொன்றாய் விரவிக்கொள்ளே. ௱௧௨

விரவியேவொருகடிதான் அந்திசந்தி விவரமுடன்மண்டலமே
கொண்டாயானால், பரவியேமந்தமுடன் அக்கினியாமந்தம்பாங்கான
ஷணத்தின்வாயுகூடக, கரவியேபித்தமொடுபித்தவாய்வுங் கா
ஞ்தேலுமடாதீபனமுண்டாகும், பிரவியென்றவாதமெல்லாமோடு
க்கி நல்ல பிலமுண்டாபின்னமொருவிவரங்கேளே. ௱௧௩

திராட்சசூரணம்,

கேளேநீமுந்திரிகை பேரீச்சோடு இருவையுள்ளதக்கோல மது
ரமுத்தம், வாளேநீகொத்தமல்லி அல்லிக்கிழங்கும வகையானசாதி
க்காய்லவங்கஞ்சுக்கு, ஆளேகனனதிலவககப்பத்திரி அப்பனேதா
ளிசம் திப்பிலிவிலாமிச்சு, பாளேசிறுநாவற்பூலவங்கப்பட்டையாங்
கானசந்தனமுமறங்கிலுப்பே. ௱௧௪

உப்பானநெல்லிவிதை நெற்பொறியுமொக்க வுத்தமனேவகை
க்குஒருபலமாய்வாங்கி, செப்பாமல்சூரணித்து சமனிடைதான்சீனி
சேர்த்துமேவொருகடிதான் அந்திசந்திஒப்பாககாலைசும்மாமண்டல
ந்தான் உத்தமனேபசுநெய்யில் மாலையிலுண்ணத், தப்பாதபத்திய
மோ இல்லையப்பா தருவானவியாதிதனைச் சாற்றக்கேளே. ௱௧௫

சாற்றுக்கேள் பத்திதியமும் பாண்டுசோகைத் தருவானபித்த
மொடுதீரத்தபித்தம், போற்றியேகாமாலைதாகசுரமும்வாங்கிப்போம

## சந்திரா கூந்தல் வளரும்

# பரிமள தைலம்.

### புட்டி 1-க்கு விலை அணா 0 8 0

அதிக பரிமளமுடைய இத்தைலத்தில் கொஞ்சமெடுத்து தலையில் உற்பத்திஸ்தானமாகிய மயிர்க்கால்களில் தடவிப் பிரயோகித்துவந்து வந்தால், மயிரானது செழிப்பாகவும் அழகாகவும், செய்து ஆலம் விழுதுபோல நீண்டு வளரும், மயிர்க்கால்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து சிவந்த நிறத்தை மாற்றி நாகப்பழம்போன்ற கருநிறத்தையுண்டு பண்ணும், சுண்டு மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுழற்றல், தேகத்திலுள்ள சொரி, சிரங்கு, வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம், மனச்சஞ்சலம், ஞாபகமறதி முதலிய வியாதிகளைக் கண்டித்து கண்ணுக்கு மிகுந்த குளிர்ச்சி தருவதுடன் நல்ல பிரகாசத்தையும் சுகந்தபரிமள வாசனையையும் தேகத்தில் மினுமினுப்பையும் தந்து, முகத்தில் நல்ல காந்தியைக் கொடுக்கும். இத்தைலம் அநேக பிரபுக்களால் நன்குமதிக்கப்பட்டு சர்டிபிகேட்டுகள் பெற்றிருக்கின்றது. அருமையான தைலம்.



முக்கிய கவனிப்பு:— இச்சுகந்தபரிமள தைலத்தை உபயோகித்தால் கூந்தலை ஆலம் விழுதைப்போல் வளரச்செய்யுமென்பதில் சந்தேகமுடையவர்கள் தைலத்தை உபயோகித்த பிறகு ஆராய்ந்து பார்த்தால் இதனுடைய உண்மையை நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம்.

எச்சரிக்கை:— இக்காலத்தில் சிலர் உபயோகமற்ற எண்ணெய்களை வைத்துக் கொண்டு அதற்காக வெகு விமரிசையாய் நீட்டி நீட்டி எழுதி விளம்பரங்கள் செய்கிறார்கள். அப்படிப்பட்ட எண்ணெய்களை வாங்கி அநேகர் உபயோகித்து, இருந்த கூந்தலையும் போக்கடித்துக்கொண்டு ஐயோ இதென்ன அநியாயம்! கூந்தல் வளர எண்ணெய் தடவினால் இருந்த கூந்தலும் உதிர்ந்துபோய்விட்டதே என்று விசனமுற்று ஏங்கி நிற்கிறார்கள் அப்படிப்பட்ட எண்ணெய்களை வாங்கி உபயோகிப்பவர்களுக்கு இது ஓர் எச்சரிக்கை ஞானத்தைக் கொடுத்து கூந்தலை வளர்க்கும் எங்களுடைய சந்திரா கூந்தல் வளரும் பரிமள தைலத்தை வாங்கி உபயோகித்தால் யாதொரு கெடுதியும் சம்பவிக்காதென்று உத்திரவாதம் கொடுக்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| புட்டி 1-க்கு விலை அணா | 0 | 8 | 0 |
| தபால் கூலி அணா | 0 | 8 | 0 |

எமது விலாசம்:—

கு. ஆ. கிருஷ்ணசாமி முதலியார்
நெ. 3[illegible], தங்கசாலைத்தெரு, மதராஸ்